**கெஸ்பாவ நகர சபை - 2023**

-----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கெஸ்பாவ நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கெஸ்பாவ நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நியமத்தின் பந்தி இலக்கம் 3.29 இன் பிரகாரம் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் ரூபா 41,559,191 காண்பிக்க வேண்டியிருந்த தொகை காண்பிக்க வேண்டியிருந்த போதிலும் ரூபா 59,044,091 காண்பிக்கப்பட்டிருந்தது. | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்தல் ரூபா 57,837,591 பெறுமதி சரியானதாகும். | நியமத்தின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தளபாடப் பொருட்களின் கீழ் ரூபா 5,560,527 பெறுமதியுடைய மரத் தளபாடங்கள் அல்லாத ஏனைய விடயங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியான விடயங்களை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான விடயங்களை இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2016 திசம்பர் 29 ஆம் திகதிய இலக்கம் 2016/30 என்ற அரச நிருவாக சுற்றறிக்கையின் 31 ஆம் பந்தி | சபைக்குச் சொந்தமான 26 வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | எரிபொருள் பரிசோதனை மேற்கொண்டு பூர்த்தி செய்யப்பட் டுள்ளதுடன் அந்த அறிக்கையை பரீட்சித்ததன் பின்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 564,836,406 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 175,382,222 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமான மான மூலம் | 2023<br>மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | <br>சிட்டையிடப் பட்ட வருமானம் | <br>சேகரிக்கப்பட்ட வருமானம் | <br>திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2022<br>மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | <br>சிட்டையிடப் பட்ட வருமானம் | <br>சேகரிக்கப்பட்ட வருமானம் | <br>திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 84,000,000 | 90,943,319 | 50,671,439 | 33,328,561 | 84,000,000 | 84,000,000 | 50,162,444 | 33,834,556 |
| (ii) | வாடகை | 32,340,000 | 29,898,000 | 28,236,964 | 3,517,241 | 15,500,000 | 12,656,200 | 13,699,622 | 1,239,839 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,550,000 | 1,625,400 | 1,625,400 | - | 1,500,000 | 1,488,000 | 1,488,000 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 260,000,000 | 378,626,527 | 378,656,527 | - | 290,000,000 | 315,000,000 | 315,000,000 | - |
| | மொத்தம் | 377,890,000 | 501,093,246 | 459,190,330 | 36,845,802 | 391,000,000 | 413,144,200 | 380,350,066 | 35,074,395 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 170 ஆவது பிரிவின் பிரகாரம் ஆதனவரி அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுக்காமையினால் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மற்றும் வரி மீதி ரூபா 64,976,468 ஆக இருந்த துடன் ரூபா 50,000 இனை விஞ்சிய 62 ஆதனவரி அலகுகளில் இருந்து அறவிட வேண்டிய நிலுவை மீதி ரூபா 6,777,382 ஆகும். | 2024.01.01 ஆந் திகதி முதல் ரூபா 50,000 இனை விஞ்சிய 62 ஆதனவரி அலகுகளிலிருந்து அறவிட வேண்டிய நிலுவை மீதி ரூபா 6,771,382 ஆக இருந்ததுடன் 2024.04.01 ஆம் திகதி வரையில் அதில் 05 ஆதனங்களுக்காக பகுதி பகுதியாகவும் மற்றும் முழுமையாகவும் ரூபா 808,631.61 அறவிடப்பட்டள்ளது. | நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட ஆதனவரி வருமானம் ரூபா 84,000,000 ஆக இருந்த போதிலும் சிட்டையிடப்பட்ட ஆதனவரி வருமானத்தில் ரூபா 28,041,060 அதாவது 33.38 சதவீதத்தை அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது. | இந்த ஆதன வரியை அறவிடுவதற்காக 2023 ஆம் ஆண்டின் நடாடும் சேவையை நடாத்துதல் மற்றும் ஆதனவரி தடை செய்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நடப்பாண்டின் வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மீதியான ரூபா 68,572,810 தொகையில் மீளாய்வாண்டின் போது ரூபா 26,686,685 அதாவது 39 சதவீதம் அறவிடப்பட்டுள்ளதுடன் ரூபா 41,886,125 அதாவது 61 சதவீதத்தை அறவிடுவத்றகு தவறியிருந்தது. | இந்த ஆதன வரியை அறவிடுவதற்காக 2023 ஆம் ஆண்டின் நடாடும் சேவையை நடாத்துதல் மற்றும் ஆதனவரி தடை செய்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ஈ) | களிகாட்ட வரி ரூபா 281,047 அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | ஆதனவரி 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் சபை 2012/2013 ஆண்டுகளின் போது இறுதி தடவையாக மதிப்பீடு செய்திருந்ததுடன் அந்த ஆண்டை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டிலும் ஆதனவரி அறவிடப்பட்டிருந்தது. | ஆதனவரியினை மதிப்பிடுவதற்காக 2021 ஆம் ஆண்டு முதல் மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு கோரிக்கை விடப்பட்டிருந்ததுடன் செலவின நிதி ஏற்பாடும் ஒதுக்கப்பட்டிருந்த போதும் இது வரை அது தொடர்பாக நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் இந்த ஆண்டின் போது மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆதனவரி மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஊ) | கழிவுப் பொருள் அகற்றுவதற்காக 2023 சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 1,208,759 ஆன நிலுவை ரூபா 1,156,259 அதாவது 22 சதவீதம் 2023 ஆம் ஆண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய மொத்த கழிவுப்பொருள் வரி பெறுமதி ரூபா 2,542,643 ஆகும். | 2023.12.31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய மொத்தக் கழிவுப் பொருள் வரி பெறுமதி ரூபா 2,542,135 ஆகும். | நிலுவைக் கழிவுப் பொருள் வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | நீண்ட கால அடிப்படையில் வாடகைக்கு வழங்கப்படுகின்ற கடைகளுக்காக 2023 ஆம் ஆண்டிற்குரிய சிட்டையிடப்பட்ட ரூபா 29,898,000 வருமானத்தில் ரூபா 1,676,690 அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது. | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப் படுகின்றது. | நிலுவைக் கடை வாடகை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | 10 தவணைகளுக்கு மேற்பட்ட 10 ஆதனங்களின் ரூபா 532,800 ஆன நிலுவைக் கடை வாடகை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மிகுதி தொகையையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை ஆதன வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | 2001 ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 593,065 தொகையும், 2009 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை ரூபா 446,600 தொகையில் ஆக அறவிட வேண்டியதாகக் காணப்பட்ட மீன் கடை நிலுவை வாடகை மீதி 2023 திசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் கிடைக்கின்ற ஆலோசனையின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் மேற்கொண்டு கணக்காய்விற்கு அறிக்கையிடப்படும். | நிலுவைக் கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு 122 கடைகளிலிருந்து அறவிட வேண்டிய நிலுவைக் கடை வாடகை வருமானம் ரூபா 2,861,841 ஆக இருந்ததுடன் ரூபா 100,000 தொகைக்கு மேற்பட்ட 04 வாடகையாளரிடமிருந்தும், ரூபா 50,000 இற்கு மேற்பட்ட 09 வாடகையாளர் களிடமிருந்தும் வாடகையாளர்களையும் உள்ளடக்கியிருந்தது. | மிகுதித் தொகையையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவைக் கடை வாடகை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஓ) | 2023 சனவரி 01 இல் உள்ளவாறு வருடாந்த கேள்வியின் அடிப்படையில் வாடகைக்கு வழங்கப்பட்ட வாகனத் தரிப்பிடத்தில் ஆதனங்களுக்குரிய மொத்த நிலுவை ரூபா 440,882 ஆகவும் பொது மலசல கூடத்தின் | ரூபா 206,260 நிலுவை பணத்தை பதிவழிப்பதற்கு அங்கீகாரத்திற்காக உள்ளூராட்சி ஆணையாளரிடம் கோரப்பட்டுள்ளதுடன் பொது மலசல கூடத்தின் மிகுதிப் | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிலுவை மீதி ரூபா 45,790 தொகை, சிற்றுண்டிச் சாலைக்கான நிலுவை ரூபா 265,000 தொகையும் ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 499,622 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | பணத்தை அறவிடுவதற்குரிய மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | |
| (ஔ) | 2017 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 191,823 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2017 இற்குரிய நிலுவை மீதியாக பட்டோலைகள் தயாரித்து உள்ளூராட்சி மாகாண இறைவரித் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்ட போதும் 2017 இற்குரிய தகவல்கள் அவர்களிடம் காணப்படாதிருந்ததாக கூறி திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (க) | ஆவணப்படுத்தப்பட்ட 41 தொலைத்தொடர்பு கோபுரங்களில் 08 இன் பெறுமதி மதிப்பீடு செய்யப் படாதிருந்ததுடன் மதிப்பீட்டுப் பெறுமதியுடன் உள்ள 21 கோபுரங்களில் இருந்தும் சபைக்கு ரூபா 1,451,008 வருமானத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | மதிப்பீடு செய்யப்படாத கோபுரங்களை மதிப்பீடு செய்வதற்காக உரிய நிறுவனங்களுக்கு கட்டிடத் திட்டத்தின் பிரதியை அனுப்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் கோபுரங்களிலிருந்து இதுவரை யில் அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்காக மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றது. | கோபுரங்களின் மதிப்பீட்டு நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2007 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 169,203 முற்பணத் தொகையை தீர்த்துவைப்பதற்கு சபை தவறியிருந்தது. | ஒப்பந்தத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக மிகுதியாகவுள்ள முற்பணத் தொகையான ரூபா 169,203 தீர்க்கப்படவில்லை. | பெற வேண்டிய பணத்தை தாமத மின்றிப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் 2018 திசம்பர் 31 | சுற்றறிக்கையினதும், உள்ளூராட்சி உதவி | சகல நிலையான சொத்துக்களும் மீள் |

| | | | |
|---|---|---|---|
| | ஆந் திகதிய இலக்கம் 4/2018 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது நிறுவனத்திற்குச் சொந்தமான சகல நிலையான சொத்துக்களும் மீள் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யவேண்டியிருந்தமை உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் 2021 பெப்ரவரி 01 ஆந் திகதிய இலக்கம் LGD/10A/4/ந.கி/2019 என்ற கடிதத்தின் பிரகாரம் அறிவிக்கப்பட்ட போதும் நகர சபையினால் 2023 ஆம் ஆண்டின் போதும் காணி, கட்டிடங்கள், வாகனங்கள் தவிற ஏனைய சொத்துக்கள் மிள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆணையாளரினதும் கடிதத்தின் பிரகாரம் கிடைத்த ஆலோசனையின் படி 2020 ஆம் ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது நிறுவனத்திற்குச் சொந்தமான காணி, கட்டிடங்கள் மற்றும் வாகனங்களுக்காக மீள் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன் சபைக்குச் சொந்தமான ஏனைய நிலையான சொத்துக்களுக்காக மீள் மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது. | மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சபைக்குச் சொந்தமான 05 வாகனங்களின் மைலோ மீற்றர் செயலிழந்து காணப்பட்டதுடன் எரிபொருள் எரிவுப் பரிசோதனை உரிய பிரகாரம் மேற்கொள்ளப்படவில்லை. | பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் முடிவடைந்தவுடன் எரிபொருள் பரிசோதனை மேற்கொண்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும். | எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஈ) | 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,030,286 ஆன மாகாண சபை கடன்கொடுத்தோர் மீதியில் 2019 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 1,020 மீதியும், 2021 ஆம் ஆண்டிற்கான ரூபா 3,029,266 மீதியும் உள்ளடங்கியிருந்த போதும் அந்த மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாகாண சபை கடன்கொடுத்தோர் மீதியில் 2019 ஆம் ஆண்டிற்குரியதாகக் காண்பிக்கப்பட்ட ரூபா 1,020 மீதி 2023 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட செயற்திட்டத்தில் மேலதிகமான ஒதுக்கீடு ஆகும். அதனை எதிர்காலத்தில் பதிவழிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டிற்காக காண்பிக்கப்பட்ட ரூபா 329,266 மீதியில் 08 கிராமிய வீதி செயற்திட்டங்களின் | செலுத்த வேண்டிய கடன் மீதிகளை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பணம் கிராமிய வீதி அமைச்சிலிருந்து இதுவரை கிடைக்கப்பெறாதிருந்ததுடன் 06 செயற்திட்டங்களுக்காக 2024 ஆம் ஆண்டின் போது நிதி கிடைத்தமையினால் எதிர்காலத்தில் செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | |
| (உ) | வேலை கடன்கொடுத்தோர் மீதியில் உள்ளடக்கப்பட்ட 2020 முதல் 2021 வரை 16 செயற் திட்டங்களுக்காக செலுத்த வேண்டிய ரூபா 3,007,011 கடன் மீதியை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 16 செயற்திட்டங்களுக்கு உரிய கடன்கொடுத்தோர் மீதியை எதிர்காலத்தில் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய கடன் மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2017 முதல் 2022 ஆம் ஆண்டு வரை கேள்வி பிணைவைப்பு ரூபா 2,428,683 தொகை தீர்த்துவைத்திருக்கப்பட்டிருக்க வில்லை. | கேள்வி பிணைவைப்பு எதிர்காலத்தில் தீர்த்து வைக்கப்படும். | செலுத்த வேண்டிய மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் 02 வாகனங்கள் செயலிழந்த நிலையில் காணப்பட்டதுடன் பைபர் படகு மடபாத்த கழிவுப்பொருள் தளத்தில் பயன்பாட்டிற்கு எடுக்கப் பட்டிருக்க வில்லை. | மோட்டார் கிரேடர் மற்றும் கம்பெக்டெரிற்கான பழுதுபார்த்தல்களை மேற்கொள்வதற்கு உரிய கூறுவிலை கோரும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் பைபர் படகு ஆபத்தான நிலைமையின் போது பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 மனிதவள முகாமைத்தவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ஊழியர் கடன் மீதி ரூபா 1,866,135 ஆக இருந்த போதிலும் அந்த மீதியில் 03 உத்தியோகத்தர்களுக்கு 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் நிலுவை மீதி ரூபா 299,906 தொகையும், 04 உத்தியோகத்தர்களின் 10 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை மீதி ரூபா 169,495 உம் ஆகும். | 03 உத்தியோகத்தர் களிடமிருந்து 05 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை மீதி ரூபா 299,906.00 ஆகும். | நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கெஸ்வாவ நகர சபையின் 2023 ஆம் ஆண்டின் பாதீட்டின் மூலம் மீண்டெழும் அல்லாத செலவினங்களுக்காக ரூபா 309,269,600 நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியாக செலவிடப்பட்ட செலவினம் ரூபா 119,664,673 ஆகும். | 2023 ஆம் ஆண்டில் செலவினக் கட்டுப்பாட்டு சுற்றறிக்கை 3/2022 இன் பிரகாரம் சபையின் சகல செலவினங்களையும் குறைப்பதற்கு தேவையான சகல நடவடிக்கைகளும் தொடர்ந்தும் அமுல்படுத்தியதன் காரணமாக 2023 ஆம் ஆண்டின் உள்ளபடியாக செலவிடப்பட்ட மீண்டெழும் செலவினம் குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. | பாதீடு கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படல் வேண்டும். |